<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 123/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 13 P.W.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தரம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்புசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் *2021* ம் வருடத்தில் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த *25.12.2021* ம் தேதியன்று பகல் 11.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்த போது நான் பொறுப்பு அலுவில் இருந்த போது நேரில் ஆஜரான சுரேஷ்குமார் த/பெ. ஆறுமுகம் பொன்னேரியை சேர்ந்தவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையம் பரிசிலனைக்கு பின் நிலைய குற்ற எண் *1469/2021* ச/பி *279, 337* இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் ஆவணங்களை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் ஒரு நகலை உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.*5* என குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் இருந்து 4 கிலோமீட்டர் இருக்கும் என்றால் ஆமாம். புகார் கொடுக்க வரும் போது யார் உடன் வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை பேர் வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. புகார் காவல்நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதா அல்லது எழுதி கொண்ட வந்தார்களா என்றால் எழுதி கொண்டு வந்தார்கள். புகாரில் சொல்லியுள்ள வாகனம் TN 42 x 0050 Hero Honda Splendor வாகனத்தின் லைசன்ஸ் மற்றும் ஆர்சி புக் புகாருடன் கொடுத்தார்களா என்றால் இல்லை. புகாரில் சொல்லப்பட்ட விபத்தான ஆறுமுகம் என்பவற்கு சுமார் 73 வயது இருக்கும் என்றால் ஆமாம் புகாரில் அவர் தான் உள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் நிறம், மாடல் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். புகாரில் சொன்ன மாதிரி விபத்து நடக்கவில்லை என்றாலும் வயோதகத்தின் காரணமாக தன்னிச்சையாக ஏற்பட்ட விபத்தில் நஷ்ட ஈடு பெற வேண்டி பொய்யாக புகார் கொடுத்து அந்த புகாரின் பேரை நீங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. காயம்பட்டவரை எதிரி தான் ஆம்புலன்ஸ்ஸில் அழைத்து வந்து உடுமலை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார் என்றால் தெரியவில்லை. புகாரில் வாகனத்தின் எந்த பகுதி சேதமானது என்பது குறித்து சொல்லப்படவில்லை என்றால் ஆமாம்.
2. எதிரியின் வாகனத்தின் எந்த பகுதி மோதி விபத்து ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் சொன்னவாறு எதிரியின் வாகனம் மோதி விபத்து ஏற்படவில்லை என்றாலும் பெட்ரோல் பங்கிற்கு வலது புறம் திரும்பும் போது தன்னிச்சையாக நிலை தடுமாறு கீழே விழுந்துவிட்டார் என்றாலும் பின்னால் வந்த இவரது வாகனத்தை நிறுத்தி உதவி செய்ததால் இவர் மீது தவறாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் இல்லை. உண்மையில் எதிரியின் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தால் அவரது வாகனத்தின் சேதாரம ஏற்பட்டிருக்கும் என்றாலும் அது போன்று எதும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.எதிரிக்கும் இந்த

விபத்திற்கும் காரணம் இல்லை என்றாலும் எதிரியின் வாகனத்திற்கும் இந்த விபத்திற்கும் காரணமில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala ., B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.